7th May 1957]

III.—ADJOURNMENT MOTIONS.

(1) MOVEMENT LAUNCHED BY THE DRAVIDA KAZHAGAM.

Mr. SPEAKER : Yesterday I received notice of a Motion under Rule 41 of the Madras Assembly Rules from hon. Member Sri V. K. Ramaswamy Mudaliar. It reads as follows :—

" Under Rule 41 of the Madras Assembly Rules, I beg leave to move for an adjournment of the business of this Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance, namely, the failure of the Government to take proper administrative steps to deal with the recently launched movement of the Dravida Kazhagam to efface certain portions of the name boards of hotels in the State."

I would like to hear the hon. Member as to how it satisfies the conditions of rule 41.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Have I to formally move the Motion?

Mr. SPEAKER : Not necessary. The hon. Member can speak on it.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, முதல் முதலில் திராவிட கழகத்தினர் சில காலத்திற்கு முன்பு தேசியக்கொடியை எரிப்பதாக முன்வந்தார்கள். இரண்டாவதாக விநாயகர் சிலையை உடைக்க முன்வந்தார்கள். பின்னர் ராமர், சீதை இவர்களையெல்லாம் கேவலமாகப் பிரசாரம் செய்தார்கள். கடைசியாக இப்பொழுது பிராமணர்களை ஒழிப்போம், அழிப்போம் என்று சொல்லிக் கொண்டு ஹோட்டல் போர்டுகளில் பிராமணர்கள் பெயரை அழிப்பதாக முன்வந்திருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், முதலில் ஆட்டை கடிப்பேன், மாட்டை கடிப்பேன், பின்னர் மனிதனையும் கடிப்பேன் என்று சொல்லுவது போல் இருக்கிறது. இந்த அராஜகத்தைப் பரப்பும் கூட்டத்திற்கு இந்த மந்திரி சபை அனுசரணைக் கொடுப்பது அவ்வளவு தகுதியல்ல. குறிப்பாக முதல் மந்திரி ஸ்ரீ காமராஜர் இந்த விஷயத்தில் இவ்வளவு ஊக்கம் காட்டுகிறார் என்று முதல் முதலாக அவர் மீது குற்றம் சாட்டுகிறேன். இன்னொரு நாடாக இருந்தால் இம்மாதிரி செய்வதற்கு, அதிலும் முக்கியமாக தேசிய கொடியை எறிக்க முன் வந்தவர்களுக்கு, மணக்கோளாறு என்று உள்ளே தள்ளியிருப்பார்கள்.

The Hon. Sri C. SUBRAMANIAM : The hon. Member might please confine himself to the motion.

Mr. SPEAKER : I would request the hon. Member to confine his remarks to the motion.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : இன்று பிராமணாள் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். நாளைக்கு முதலியார் ஹோட்டல், ரெட்டிமார் ஹோட்டல், நாடார் மான்ஷன் இவைகளெல்லாம் இருக்கிறது. அவைகளையும் எதாவது செய்ய முன்வருவார்கள் என்று கண்டிப்பாக சொல்லுகிறேன். இது ஒரு பெரிய அரசியல் " ஸ்டண்ட் " என்று தான் நினைக்கிறேன். இவர்கள் இம்மாதிரி செய்வது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்பதை நான் உங்கள் முன்பாக சொல்ல விரும்புகிறேன். இரண்டு நாளாக திருவல்லிக்கேணியில் லட்சக்கணக்கான ஜனங்கள் கூட்டம் வேடிக்கைபார்க்க, போலீஸார் முன் நின்று அவர்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [7th May 1957

களுக்கு உதவி செய்கிறர்கள் என்று அநேகம்பேர் என்னிடம் வந்து சொன்னர்கள். முக்கியமாக மத்திய சர்க்காரைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தர் ஹோட்டலுக்குப் போகும்பொழுது அவரை இன்னர் என்று தெரிந்துகொள்ளாமல் அவரையும் லாரியில் போட்டுக்கொண்டு போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்கு கொண்டுபோய் விட்டார்கள். அவர் அங்கே விலாஸம் கொடுத்தபிறகு விடுதலை செய்யப்பட்டார். இன்று காலை சுமார் 100 ஹோட்டல் முதலாளிகளும் மற்ற சில பிரமுகர்களும் என்னிடம் வந்து "சென்னை ராஜ்யத்தில் நல்ல அரசாட்சி நடக்கின்றதா? இதற்கு ஒரு கேள்வியும் இல்லையா, இந்த ஆபத்துக்கு என்ன விமோஜனம்?" என்று கூக்குரல் போட்டார்கள். இம்மாதிரி செய்வதைப் பார்த்துகொண்டு மந்திரி சபை சும்மா இருப்பதின் காரணம் என்ன? அதை தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறர்களா? இவ்வளவு நாட்களாக இந்தப்பிரச்னைக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். இதற்காக எவ்வளவு போலீஸ்காரர்கள், மலபார் போலீஸ்காரர்கள் உபயோகப்படுத்தவேண்டியிருக்கிறது? இதற்கு என்ன செலவாகிறது? இவைகளையெல்லாம் யோசிக்கவேண்டும். மேலும் மக்களுக்கு இதனுல் மன நிம்மதி என்பதே கிடையாது. இம்மாதிரி நடவடிக்கைகளெல்லாம் நடந்திருப்பதைப் பார்த்தால், சர்க்கார் கட்சி அங்கத்தினர்கள் அநேகம் பேர் நான் சொல்லுவது சரி என்றுதான் நினைப்பார்கள். ஆனல் அவர்களுக்கு வாய்ப் பூட்டு போட்டிருப்பதால் இம்மாதிரி சொல்லுவதற்கு முன்வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இருந்தபோதிலும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றல் அவர்கள் தைரியமாக முன்வரவேண்டும் என்பதுதான். பாரதியார் "அஞ்சலென் றருள் செயுங்கடமை யில்லாயோ?" என்று கூறியது போல் எல்லோரும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு கொடுத்து. . . .

Mr. SPEAKER : May I remind the hon. Leader of the Opposition that his appeal to the Members for voting in favour of his Motion comes in only after the Chair admits the Motion.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : இதில் மந்திரி சபை, முக்கியமாக முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறர்கள், என்ன பாதுகாப்பு கொடுக்கப்போகிறர்கள் என்பதை நாம் எல்லோரும் அறிய விரும்புகிறேம்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இதிலே தற்பொழுது முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம், பிரேரேபிக்கப் பட்ட இந்தத் தீர்மானம் ஒரு ஒத்திவைப்பு பிரேரணையாக எடுத்துக் கொள்ளத் தகுந்ததா என்பது. அதைப் பற்றி ஆலோசிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறேம். அதைப்பற்றி தான் எதிர்க்கட்சித் தலைவர் கூட சொல்லுவார் என்று நினைத்தேன். ஆனல் அவர்கள் வெவ்வேறு விஷயங்களைப்பற்றி, இதற்கு புறம்பான விஷயத்தைப்பற்றி, இப்பொழுது அவசியம் இல்லாதபொழுது, பேசியிருக்கிறர் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலே நாம் முக்கியமாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டியது. இந்த ஜாதியைப்பற்றி ஒவ்வொருவரும் அவரவர்கள் அபிப்பிராயத்தை வைத்துக்கொள்வதற்கு பூரண சுதந்திரம் உண்டு. சில பேர் தங்களுடைய ஜாதி பெயர்களை மாற்றிக்கொள்ளலாம், மாற்றிக்கொள்ளாமலும் இருக்கலாம். மாற்றிக்கொண்ட பிறகு மறுபடியும் போட்டுக்கொள்ளலாம். உதாரணமாக, ஸ்ரீ ஸி. என். அண்ணுதுரை தன் பெயரை அண்ணுதுரை முதலியார் என்று மாற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவரவர்கள் ஜாதிப் பெயரை போட்டுக்கொள்ளக்கூடாது என்ற அபிப்பிராயத்தை மக்களிடையே பரப்புவதற்கும் எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனல் அப்படி பரப்புகின்ற முறையிலே மக்களை பலாத்காரமாக வற்புறுத்துவதற்கோ, அதன் காரணமாக மற்றவர்களுக்கு நஷ்டம் உண்டாக்கவோ யாருக்கும் சுதந்திரம் கிடையாது. ஒருவருடைய அபிப்பிராயத்தை

7th May 1957] [Sri C. Subramaniam]

மக்களிடையே பரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் பொழுது சர்க்கார் முன்வந்து அதைத் தடுப்பது என்பது இப்பொழுது நம்முடைய அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற சுதந்திரத்தைப் பறிப்பது ஆகும். ஆனால் அப்படி தங்களுடைய அபிப்பிராயத்தை பரப்பும் மூலமாக சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கை ஏதேனும் ஏற்படுமேயானால், உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இந்த இரண்டையும் ஆலோசனை செய்துதான் போதிய அளவு போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. சட்டங்களை மீறி ஏதாவது காரியம் நடக்குமேயானால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த இயக்கத்தைப்பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள சர்க்கார் தவறிவிட்டது என்று சொல்லுவது, முதலில் விஷயங்களை நன்கு தெரிந்துகொள்ளாமல் அவ்வாறு சொல்லப்படுகிறது என்று நான் கருதுகிறேன். போதிய அளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாகத்தான் இது வரையில் எந்த விதமான கலவரமோ, அடிதடியோ நடக்கவில்லை. சர்க்கார் இந்த விஷயத்தை கூர்ந்து கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள். அவ்வப்பொழுது அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும், தயவு தாக்ஷண்யமில்லாமல் எது நியாயமோ, எது அவசியமோ அதை செய்வதற்கு சர்க்கார் தயங்க மாட்டார்கள் என்பதையும் இந்த சபையிலே நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமது எதிர்க்கட்சித் தலைவர் இந்த இயக்கத்தைப்பற்றி அரசியல் " ஸ்டண்டு " என்று சொன்னார்கள். நானும் கூட இந்தத் தீர்மானத்தைப்பற்றி சொல்லுவதானால் இதுவும் ஒரு அரசியல் "ஸ்டண்டு" என்று சொல்லமுடியும். (ஆரவாரம்.) ஆனால் இந்தத் தீர்மானம் ஒத்திவைப்பு பிரேரணையாக எடுத்துக்கொள்ள தகுதியில்லாது இருப்பதால் நான் அதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்தச் சபையின் எல்லா நடவடிக்கைகளையும் ஒத்திவைத்துவிட்டு இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டும் என்கின்ற அளவுக்கு இந்தத் தீர்மானத்திலே எந்த விதமான தகுதியும் இல்லாத காரணத்தினாலே, இதை நிராகரிக்கவேண்டுமென்று கனம் சபாநாயகரை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : In my opinion this adjournment motion does 11–20 a.m.
not satisfy the conditions necessary for admission of an adjournment motion. Though of recent origin, it is not urgent. It has not been shown how the Government have failed in doing their duties. The matter involved raises no more than the ordinary administration of law. I, therefore, rule this motion out of order.

(2) STRIKE THREAT BY VILLAGE OFFICERS.

Mr. SPEAKER : I have received notice of another motion under Rule 41 of the Assembly Rules from the hon. Member Sri M. Kalyanasundaram which reads as follows :

" I move that the business of the House be adjourned for discussing a definite matter of urgent public importance, namely, the failure of the Government to meet the just demands of the Village Officers which has created a serious situation resulting in threats of strike by the Village Officers and counter-threats by the Government, which are likely to disturb the village atmosphere ".

Before I give my ruling on the motion I would like to hear the hon. Member who has given notice of the motion.